# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 23.02.2026**

**அசல் வழக்கு எண். 255/2013**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வாதிகள் எனக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பிராது தபசில் சொத்துக்களில் பங்கு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பிராது தபசில் சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்துக்களின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்துக்களின் மால் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. பிராது தபசில் சொத்துக்கள் காவேரிகோனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். காவேரிகோனார் இறந்து 60 வருடங்கள் இருக்குமா என்றால் 40 வருடங்கள் இருக்கும். காவேரிகோனாருக்கு காவேரிகோனார் என்ற செல்லையா கோனார் என்ற ஒருவர் மட்டுமே மகன் என்றால் சரிதான். மேற்படி காவேரிகோனார் என்ற செல்லையா கோனாருக்கு வேலம்மாள், நான் மற்றும் சிவனாத்தாள் ஆகிய 3 பேர் வாரிசுகள் என்றால் சரிதான். சிவனாத்தாள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். சிவனாத்தாளுக்கு அருணாச்சலம் என்ற ஒரு மகன் உண்டு என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களில் காவேரிகோனார் என்ற செல்லையா கோனாரின் 3 வாரிசுகளுக்கும் சமபங்கு உண்டு என்றால் சரியல்ல. அந்த இடம் பொறுத்த கடனை திரும்ப செலுத்துவதற்கு என்னை தவிர்த்து வேறு யாரும் எங்கு எடுக்கவில்லை. பிராது தபசில் சொத்துக்களுக்கான கடன் திரும்ப செலுத்தப்பட்டதை காண்பிக்கும் ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தில் உள்ள இடத்தை 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் கொடுத்தேனா என்றால் நான் கிரையம் கொடுக்கவில்லை. என்னிடம் சண்டையிட்டு அந்த இடத்தை பெற்றுக்கொண்டார்கள். மேற்படி சண்டை தொடர்பாக 2 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 2 முதல் 10

பிரதிவாதிகளின் பெயரில் பிராது தபசில் 1ம்அயிட்ட சொத்தை பொறு,த்து பிறப்பிக்கப்பட்ட ஆவணத்தை ரத்து செய்யகோரி நடவடிக்கை எதுவும் மேற்கொண்டேனா என்றால் இல்லை.

4. சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் பிராது தபசில் 1ம் அயிட்ட சொத்தில் உள்ள இடத்தை 9 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார்களா என்றால் கிரையம் கொடுத்தார்கள். நான் பிராது தபசில் 1ம் அயிட் ட சொத்தை பொறுத்து கிரையம் கொடுத்தபிறகு வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் எனக்கு அனுப்பினார்களா என்றால் அனுப்பியிருப்பார்கள். அந்த அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

5. வாதிகள் காவேரி கோனார் என்ற செல்லையாகோனாருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களிலும் பங்கு கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்களை தவிர்த்து வேறு சொத்துக்கள் காவேரி கோனார் என்ற செல்லையாகோனாருக்கு இல்லை.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**